# சூரியகாந்தி விதையின் விலை நிலையாக இருக்கும்

உலகளவில் இந்தியா எண்ணெய் வித்து பயிர்கள் உற்பத்தியில் மிகப் பெரிய இடம் வகிக்கிறது. எண்ணெய் வித்துகள் இந்திய வேளாண் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு பெறுகிறது. மற்ற தாவர எண்ணெய்களை விட சூரியகாந்தி எண்ணெயானது அதன் ஆரோக்கிய தரம் காரணமாக நுகர்வோர்களால் பெரிதும் விரும்பப்படுகிறது.

பொருளியல் மற்றும் புள்ளியியல் அமைச்சகத்தின் படி, 2014-15ம் ஆண்டு இந்தியாவில் சூரியகாந்தி 0.55 மில்லியன் எக்டர் பரப்பளவில் 0.41 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கர்நாடகா, ஆந்திர பிரதேசம், ஒடிசா, மேற்கு வங்காளம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் சூரியகாந்தி அதிகம் விளைவிக்கப்படுகின்றது. இந்தியாவின் மொத்த சூரியகாந்தி விதை உற்பத்தியில் இம்மாநிலங்கள் 82 சதவிகிதம் பங்களிக்கின்றது. சூரியகாந்தி எண்ணெய் உக்கரைன், இரஷ்யா, அர்ஜென்டினா, பிரேசில் மற்றும் சீனாவில் இருந்தும் இறக்குமதி செய்யப்படுகின்றது. சென்னை, நவசேவா மற்றும் மங்களூர் துறைமுகங்கள் முக்கிய வணிக இடங்களாகும்.

தமிழ்நாட்டில, 2014-15ல் சூரியகாந்தி 9,000 எக்டர் பரப்பளவில், 13,000 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஈரோடு, கரூர், ஒட்டன்சத்திரம், பழனி, திண்டுக்கல், திருப்பூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் சூரியகாந்தி அதிகம் விளைவிக்கப்படுகின்றது. சன்பிரெட் மற்றும் காவேரி இரகங்கள் அதிக எண்ணெய் தன்மை காரணமாக விரும்பப்படுகின்றன. கலப்பு மற்றும் மாசு இல்லாத பெரிய கருப்பு விதைகள் நல்ல விலை பெறுகிறது.

விவசாயிகள் சூரியகாந்தி விற்பதற்கான முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், கடந்த 15 ஆண்டுகளாக வெள்ளகோவில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய சூரியகாந்தி விதையின் விலையை ஆராய்ந்தது. சந்தை மற்றும் பொருளியல் ஆய்வுகளின் அடிப்படையில், சூரியகாந்தி விதையின் பண்ணை விலை ஏப்ரல் - மே, 2016ல் குவிண்டாலுக்கு ரூ.3500 -3600 என இருக்கும்.

எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனைகளின்படி சூரியகாந்தி விதைகளை விற்க பரிந்துரைக்கபடுகிறார்கள்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள:**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி -0422-2431405

**தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:**

பேராசிரியர் மற்றும் தலைவர்
எண்ணெய் வித்துக்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி எண் - 0422-2450812